தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005

தமிழ்நாடு தகவல் ஆணையம்

பிளாக் எண்.19, அரசு பண்ணை இல்லம், பேன்பேட், நந்தனம், சென்னை-600 035. தொலைபேசி எண்.044-2951 5590

ஆணை நாள். 03.11.2026

முன்னிலை

திரு அபய் குமார் சிங், இகாப (ஓய்வு)
மாநில தகவல் ஆணையர்

*****

வழக்கு எண். CP 592/F/2024

திரு.ரா.சுதாகரன், -- புகார்தாரர்

/எதிர்/

பொதுத் தகவல் அலுவலர்,
வக்பு ஆய்வாளர்,
512, காந்திரோடு, -- பொது அதிகார அமைப்பு
பண்ருட்டி-607 106,
கடலூர் மாவட்டம்.

******

ஆணை

இவ்வாணையம் 22.09.2026 அன்று பிறப்பித்த உத்தரவினை தொடர்ந்து பொது அதிகார அமைப்பின் சார்பாக அப்போதைய பொதுத் தகவல் அலுவலர் திரு.மு.சேக்முகது, வக்பு ஆய்வாளர், சென்னை-5 அவர்கள் 03.11.2026 அன்று ஆணையத்தின் முன் நேரில் ஆஜராகி, ஆணையத்தின் உத்தரவிற்கிணங்க, அப்போதைய பொதுத் தகவல் அலுவலர் தனது எழுத்துமூல விளக்கத்தில், தான் கடலூர் மாவட்டம் குறிஞ்சிப்பாடி வட்டம், வடலூர் ஆபத்தாரணபுரம் பாட்டை தெரு என்ற முகவரியை சேர்ந்த திரு.R.சுதாகரன் என்பவர் 23.12.2023 நாளிட்ட மனுவில் ஒரே பொருளை கொண்டு தகவல் கோரியதாலும், வக்பு அலுவலகத்தில் பராமரிக்கப்படும் பதிவேடுகளை குறிப்பிட்டு கோரமல் பொதுவாக கோரப்பட்டதாலும், தகவல் அறியும் உரிமை சட்டம் 2005 பிரிவு 2(f)-ன் கீழ் வழங்க இயலாது என தகவல் வழங்கப்பட்டது என்றும் அவ்வாறு வழங்கிய தகவல் மனுதாரருக்கு திருப்தி இல்லாததால் தகவல் ஆணையத்திற்கு மனு செய்துள்ளார்

என்றும் இனி வரும் காலங்களில் இது மாதிரி தவறுகள் நடக்காமல் மனுதாரர்களுக்கு தகவல்கள் வழங்குவதாகவும் உறுதி அளித்து, தனது எழுத்துமூல விளக்கத்தினை இணைத்து ஆணையத்தின் முன் சமர்ப்பித்தார். இதனை ஆணையம் பரிசீலனை செய்கையில், அப்போதைய பொதுத் தகவல் அலுவலரால் சமர்ப்பிக்கப்பட்ட எழுத்துமூல விளக்கத்தினை ஆணையம் ஏற்கவில்லை என்பதை ஆணையம் பதிவு செய்து, ஆணையம் கீழ்க்கண்ட உத்தரவினைப் பிறப்பிக்கின்றது.

- ✓ **ஆணையத்தால் 22.09.2026 அன்று விசாரணை மேற்கொள்ளப்பட்டு, பிறப்பிக்கப்பட்ட உத்தரவிற்கிணங்க, அப்போதைய பொதுத் தகவல் அலுவலர் ஆணையத்தின் முன் நேரில் ஆஜராகி, சமர்ப்பித்த எழுத்துமூல விளக்கம் ஏற்புடையதல்ல என்பதை ஆணையம் பதிவு செய்து, தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005, பிரிவு 19(8)(b)-ன் கீழ் ரூ.2,000/-(ரூபாய் இரண்டாயிரம் மட்டும்) இழப்பீடாக மனுதாரருக்கு வழங்குமாறு பொது அதிகார அமைப்பிற்கு ஆணையத்தால் உத்தரவிடப்படுகிறது. மேலும், இழப்பீட்டு தொகையினை மனுதாரர் பெற்றுக்கொண்டதற்கான ரசீதை தற்போதைய பொதுத் தகவல் அலுவலர் 16.12.2026 அன்று ஆணையத்தின் முன் நேரில் ஆஜராகி அறிக்கை சமர்ப்பிக்குமாறு ஆணையத்தால் உத்தரவிடப்படுகிறது.**

ஒம்/-(அபய் குமார் சிங்)
மாநில தகவல் ஆணையர்

(ஆணையத்தின் ஆணைப்படி)

உதவிப் பதிவாளர்

<u>வழக்கு எண். CP 592/F/2024</u>

பெறுநர்
<u>பொது அதிகார அமைப்பு</u>

பொதுத் தகவல் அலுவலர்,
வக்பு ஆய்வாளர்,
512, காந்திரோடு,
பண்ருட்டி-607 106,
கடலூர் மாவட்டம்.

அப்போதைய பொதுத் தகவல் அலுவலர் (22.01.2024 தேதிய)
திரு.M,சேக் முகமது,
வக்ஃப் ஆய்வாளர்,
512, காந்தி ரோடு, பண்ருட்டி-607 107,
கடலூர் மாவட்டம்.

(தற்போதைய பொதுத் தகவல் அலுவலர் வாயிலாக)

புகார்தாரர்

திரு.ரா.சுதாகரன்,
2C பாட்டைத் தெரு,
ஆபத்தாரணபுரம்,
வடலூர்-607 303,
கடலூர் மாவட்டம்.

நகல்

அரசு செயலாளர்.
எண்.1, ஜார்ஜ் சிராங் தெரு,
வள்ளல் சீதக்காதி நகர்,
சென்னை - 600 001.

பதிவாளர்,
தமிழ்நாடு தகவல் ஆணையம்,
சென்னை-35.(For followup).
Copy to: File NS/PA-

